உ

சிவமயம்



கலைநகர், வட்டு. வடக்கு, சித்தன்கேணியைப்

பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் கணபதிப்பிள்ளை தங்கராசா

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# தங்க மலர்

23. 07. 2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர் கணபதிப்பிள்ளை தங்கராசா
[இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்]


அவர்களது ஞாபகார்த்தமாக வெளியிடப்படும்

# தங்க மலர்

23. 07. 2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குனிந்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்தச்சடையும் பவளம்போல் மேனியில்
பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற்பாதமும்
காணப்பெற்றால்
மனிதப்பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்


அன்புகாட்டி அரவணைத்து வளர்த்து
எம்மை அவனிதனில் ஆளாக்கி
உற்றார்க்கு உறுதுணையாய்
ஊரார் புகழ் முதல்வனாய்
வையகத்துள் வாழ்வாங்கு வாழ்ந்துகாட்டி
இன்று.......
எம்மைவிட்டுப் பிரிந்து விண்ணுலகில்
தெய்வமாகி விட்ட
அன்புத் தெய்வத்தின் பொற்பாதங்களில்
தங்கமலர் எனும் இம்மலரைச்சூட்டி
காணிக்கையாக்குகிறோம்.

இங்ஙனம்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மலர்வு
1921/06/15

உதிர்வு
2006/06/21

அமரர்
# கணபதிப்பிள்ளை தங்கராசா
(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

திதி வெண்பா

ஆண்டு விய ஆனித்திங்கள் ஏழாம்நாள்
பூண்டதொரு பூர்வபட்ச ஏகாதசியில் - நீண்டபுகழ்
தங்கராசா வெனும் தெய்வத் திருமகன்
இறைபதம் அடைந்த நன்நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# தோத்திர மாலை

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

1ம் திருமுறை

பிடியதனுருவுமை கொளமிகுகரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

### மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை

11ம் திருமுறை

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

### புராணம்

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதில் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பூவார் மலர் கொண்டடியார் தொழுவார்
புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று
மூவரக்கருள் செய்தார்
தூமா மழைநின்றதிர் வெருவித்
தொறுவின் நிரையோடும்
ஆமாம் பிணை வந்தணையுஞ் சாரல்
அண்ணாமலையாரே.

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறெனக்குண்டோ எண்டோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ
இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள் வீற்றிருந்த
அங்கணா போற்றி யமரனே போற்றி
அமரர்கள் தலைவனே போற்றி
தங்கணான் மறைநூல் சகலமுங்கற்றோர்
சாட்டியக் குடியிருந்தருளும்
எங்கணாயகனே போற்றியே ழிருக்கை
இறைவனே போற்றியே போற்றி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

ஏகநாயகனை இமையவர்க்கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வண்ணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழி செழுங்கோயில்
மிழலை விண் ணிழி செழுங்கோயில்
யோகநாயகனை யன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன்யானே.

## திருப்புராணம்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர்மதிக் கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

திருச்சிற்றம்பலம்

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்கு முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருள வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமானே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த
# திருவாசகம்

## திருவாசச் சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும்தளை நீக்கி
அல்லலறுத் தானந்த ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந்தேன்.

# சிவபுராணம்

(கலிவெண்பா)

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமனிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று ண்ணிப்பான் றாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவா ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன்அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்நிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாக வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை கல்விக்கும் நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றெழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மொன்னும் அருங்கயிற்றாற் கட்டிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கும் மூடி
மலஞ்சோரு மென்பது வாயிற் குடிலை
மலங்கலப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேன் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேனா அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா அமுதே உடையானே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேஓ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற்பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பத்திரகாளி துணை

# அமரர். உயர்திரு. கணபதிப்பிள்ளை தங்கராசா அவர்களின்

# வாழ்க்கைச் சரித்திரம்

இந்துமா சமுத்திரத்தின் முத்து எனத் திகழும் ஈழத் திருநாட்டின் சிரசாக விளங்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் மேற்குப் பகுதியில் சித்த ஆயுள் வேதமும் கட்டிடக்கலை, சிற்பக்கலை முதலிய கலைகளும் அருள்சுரக்கும் ஆலயங்களும் ஒருங்கே நிறையப்பெற்ற வட்டுக்கோட்டை எனும் பதியில் கணபதிப்பிள்ளை சீதாதேவி தம்பதியினருக்கு கடைசிப் புதல்வனாக 15-06-1921 அன்று தங்கராசா அவர்கள் பிறந்தார். இவரது உடன் பிறப்புக்களாக முருகுப்பிள்ளை, அமரசிங்கம், பாக்கியலட்சுமி, அன்னலட்சுமி, பொன்னம்மா ஆகியோர் விளங்கினர்.

துள்ளித்திரியும் பள்ளிப் பருவத்தை அடைந்த தங்கராசா தனது ஆரம்பக்கல்வியை யா/வட்டு திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும் மேல்நிலைக் கல்வியை யா/அராலி இந்துக் கல்லூரியிலும் கற்றார் கல்வி பயிலுங் காலத்தில் பாடசாலையில் தினந்தோறும் நடைபெறும் காலைக் கூட்டுப்பிரார்த்தனையில் தன்னையே பஞ்சபுராணம் ஓத ஆசிரியர் அழைப்பதாக தங்கராசா அடிக்கடி கூறுவார். இது அவரது கலைத்திறமைக்கு தக்க சான்றாக விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மேல்நிலைக் கல்வியை சிறப்புற முடித்த அன்னார் 1941ஆம் ஆண்டு இலங்கை பொலீஸ் இலாகாவில் பொலீஸ் உத்தியோகத்தராக இணைந்தார். 1942ஆம் ஆண்டு கலைநகரைச் சேர்ந்த பிரபல கட்டிட ஒப்பந்தக்காரர் சின்னத்தம்பி, வைரமணி தம்பதியினரின் புதல்வியான சாரதாம்பாளை வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொண்டார். இல்லறம் எனும் நல்லறம் தழைத்தோங்க 1947ஆம் ஆண்டு மூத்த மகள் தனபாக்கியலட்சுமியையும் அதனைத் தொடர்ந்து 1950ஆம் ஆண்டு மகன் நித்தியானந்தத்தையும் 1952ஆம் ஆண்டு மகன் சச்சிதானந்தத்தையும் 1954ஆம் ஆண்டு மகன் தயானந்தத்தையும் 1959ஆம் ஆண்டு மகள் தூயமணியையும் 1961ஆம் ஆண்டு மகள் திலகராணியையும் 1970ஆம் ஆண்டு கடைசி மகன் முருகானந்தத்தையும் புதல்வர்களாக பெற்றெடுத்து களிப்புற்றார். தான் பெற்ற பிள்ளைகளுக்கு தரமான கல்வியை வழங்கி அவர்களது கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றார். அவர்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணைகளை அமைப்பதில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்ட அன்னார் மூத்தமகள் தனபாக்கியலட்சுமிக்கு டாக்டர் கனகரட்னத்தையும் மகன் நித்தியானந்தத்திற்கு இன்பவல்லியையும், சச்சிதானந்தத்திற்கு நந்தினியையும் தயானந்தத்திற்கு செல்வக்குணவதியையும் மகள் தூயமணிக்கு கருணானந்தசிவத்தையும் (இளைப்பாறிய கணக்குப் பதிவாளர்) மகள் திலகராணிக்கு மோகனநாதனையும் (அதிபர், யா/ அராலி இந்துக்கல்லூரி) கடைசி மகன் முருகானந்தத்திற்கு தவலோஜினியையும் கைத்தலம்பற்ற வைத்து இன்புற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பீரமான தோற்றம், கள்ளங்கபடமற்ற வெள்ளை உள்ளம், இரக்கமனம், நீதிக்கு தலைவணங்கும் பண்பு, அநீதி இழைப்பவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கும் சுபாவம் ஆகிய குணாதிசயங்கள் பொருந்தியவராக காணப்பட்ட அன்னார் கடமையை கண்ணெனப் போற்றி வந்தார். கொழும்பு, காங்கேசன்துறை, மன்னார், பருத்தித்துறை, கல்முனை, ஏறாவூர், கொழும்பு – கோட்டை, மரிஹான, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், நெடுந்தீவு ஆகிய இடங்களில் இருந்த பொலீஸ் நிலையங்களில் பொலீஸ் உத்தியோகத்தராக பணிபுரிந்தார். பணிபுரியும் காலத்தில் சக உத்தியோகத்தர்களுடன் அன்பாகவும் பண்பாகவும் பழகி வந்தார். இவ்வாறாக தாய்நாட்டிற்கும், மக்களிற்கும் சேவை ஆற்றி வந்த அன்னார் 1977ஆம் ஆண்டு பொலீஸ் இலாகாவிலிருந்து ஓய்வு பெற்றார். அன்னாருடன் பணிபுரிந்த உத்தியோகத்தார்கள் சிலர் இன்று புலம்பெயர்ந்து வெளியூரில் வசித்து வரும் நிலையில் அன்னாரது பிள்ளைகளான அவுஸ்திரேலியாவில் வசிக்கும் சச்சிதானந்தம் மீதும், லண்டனில் வசிக்கும் முருகானந்தம் மீதும் எல்லையற்ற பற்றுப்பாசம் உடையவர்களாக பழகிவருகிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இல்லற வாழ்வில் மனைத்தக்க மாண்புடையாளாக வாழ்ந்து வந்த அன்னாரது மனைவியார் சாராதம்பாள் அவர்கள் 06–08–1997 அன்று இவ்வுலகை விட்டு பிரிந்தது அன்னாரை ஆழ்ந்த சோகத்தில் மூழ்கவைத்ததுடன் இத்துன்பியல் நிகழ்வு அவரது மனதில் மாறாத வடுவாகவும் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைபணிகளை மேற்கொள்வதில் மிகுந்த அக்கறையுடனும் உற்சாகத்துடனும் விளங்கிய அன்னார் வட்டுக்கோட்டை விசாலாட்சி சமேத காசி விசுவநாத சிவன் தேவஸ்தானத்தில் வருடந்தோறும் இடம்பெறும் சங்காபிஷேகத்தை நடாத்தும் குழுவினருடன் அன்னாரும் தனது இளமைக் காலத்திலேயே இணைந்து அந் நிகழ்வினை முழுமூச்சாக நடாத்தி வந்தார். மேலும் 1979ஆம் ஆண்டு முதன் விசாலாட்சி சமேத காசி விசுவநாதசிவன் தேவஸ்தானத்திற்கு முதலாக சங்கு அடுக்கும் பீடத்தை தனது உபயமாக அன்பளிப்புச் செய்தார். அது மட்டுமன்றி தனது சிறுபராயத்திலிருந்தே வட்டுக்கோட்டை கணவன் தோட்டம்பகுதியில் கோயில் கொண்டு அருள் பாலிக்கும் பத்திரகாளி ஆலயத்தில் சரியைத்தொண்டு புரிந்து வந்தார். தனது முதுமைக்காலத்திலும் கூட தனது குலதெய்வமான பத்திரகாளி மீது 1999ஆம் ஆண்டு பண்டிதர், புலவர்மணி திரு. க. மயில்வாகனனாரை நூலாசிரியராகக் கொண்டு "மாகாளி அம்மை பதிகம்" எனும் நூலை வெளியிட்டு பெரு நிறைவடைந்தார். அதே வருடம் இவ் ஆலயத்தில் நவராத்திரி காலத்தில் தனது உபயமாக கொலு வைக்கும் நிகழ்வினையும் ஆரம்பித்த பெருமை அன்னாரையே சாரும். 2000ஆம் ஆண்டு காளி சொரூபம் ஒன்றினை இவ் ஆலய வெளிமண்டபத்தில் நிறுவுவித்தார். நோய்வாய்ப்பட்டிருந்த வேளையிலும் கூட தனது நோயினைப் பொருட்படுத்தாது கடந்த 2005ஆம் ஆண்டு தைப்பூசத் தினத்தன்று தன்னுடைய ஊர்மக்களை தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு அழைத்துச் சென்று அங்கு உள்ள சந்நிதியான் ஆசிரமத்தில் மகேஷ்வர பூசையை சிறப்புற நடாத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக இறைபணியுடன் மட்டும் நின்று விடாது சமூகப்பணியிலும் தன்னை பூரணமாக இணைத்துக் கொண்டார். இதன் ஒரு அங்கமாக கலைநகர் நேருஜீ சனசமூக நிலையத்திற்கு 1972ஆம் ஆண்டு தொடக்கம் 1973ஆம் ஆண்டு வரை கல்கண்டு எனும் வார வெளியீட்டினையும் 1977ஆம் ஆண்டு தொடக்கம் 1989ஆம் ஆண்டு வரை "டெயிலி நியூஸ்" பத்திரிகையையும் அன்பளிப்புச் செய்து வாசகர்களின் அறிவுப் பசியை போக்கினார்.

இவ்வாறு சேவை நோக்குடையவராகவும், கருணை உள்ளம் மிக்கவராகவும் அன்னார் விளங்கினாலும் தனக்கென ஒரு சுய கௌரவத்துடனும் எவருக்கும் அடிபணியாதவராகவும் வாழ்ந்து வந்தார். பேரப்பிள்ளைகளின் கல்வித்திறமைகளையும், ஏனைய திறமைகளையும், அவர்களது திருமண நிகழ்வுகளையும் கண்டு இன்புற்ற அன்னார் தான் மேற்கொண்ட இறைபணியை தனது பேரப்பிள்ளைகள் தொடர்ந்து மேற்கொள்ள ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தார். தனது பூட்டப்பிள்ளைகள் மீது அளவிலா அன்பு கொண்டவராக காணப்பட்டார்.

சிறந்த உறவினராக, பண்பாளனாக, நண்பனாக அனைவருடனும் கூடிக்குலவிய அன்னாரின் வாழ்வில் விதி சதி செய்யத் தொடங்கும் நேரம் நெருங்கியது. பெற்ற பிள்ளைகள் கதறியழ, சுற்றத்தார் செய்வதறியாது கண்கலங்கி நிற்க அன்னார் 21-06-2006 அன்று புதன்கிழமை இரவு 10.00 மணியளவில் ஏகாதசித் திதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலக வாழ்வை நீத்து சிவனவன் பாதக்கமலத்தை சென்றடைந்தார்.

அன்னாரை இழந்துவிட்டதுயரம் எம்மை கொடூரமாக வாட்டினாலும் "இறப்பும் பிறப்பும் இயற்கையின் நியதி" என எம்முள் ஒருவாறு தேற்றிக் கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப் போமாக.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை**
**என்னோற்றான் கொல்எனுஞ் சொல்"**

- திருவள்ளுவர் -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் புலம்பல்

அன்பான அப்பாவே எமை நல்வழிப்படுத்த
அகிலத்தில் இனியாருளர் ஆயிரம் உறவுகள்
இருந்தாலும் உங்களைப் போல் வருமா?
துள்ளித் திரியும் வயதில் எம் துடுக்கடக்கி
கல்வி தனைப்புகட்டி தலைநிமிரவைத்து
பெருமிதம் கொண்டீர்கள் உரியவேளையில்
எம்மை உங்கள் கடமையை செவ்வனே செய்து
அப்பாவே உங்கள் கடமையாவும் சரி என
நினைத்து அமைதியாய் அவ்வுலகம் சென்றுவிட்டீர்கள்
நாமோ இவ்வுலகில் நாதியற்று நிற்கிறோம்.

## மருமக்கள் புலம்பல்

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
பார்போற்ற வாழ்ந்த மாமாவே - பக்குவமாய்
எம்முடன் பலகதைகள் பேசி உங்கள்
மகவுகள் போல எம்மை நேசித்து வந்தீர்கள்
நீங்கள் பேசிய பல கதைகள் யாவும்
நீங்கா நினைவுகளாய் எம்முள் நின்றாடுதையா
நீதிதவறாமல் நியாயமுடன் வாழ்ந்த உங்களை
இரக்கமற்ற அந்தகன் இழுத்துவிட்டான் தன்பக்கம்
ஒரு கணம் இதை எண்ணிப் பார்க்கையில்
எங்கள் உள்ளம் வெதும் புதையா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

பேரர் எம்மை செல்லமாய் அரவணைத்து
பேசிய அன்பு வார்த்தைகளும், நீதிக்
கதைகளும் எம் மனதுள் உறைந்துள்ளதையா
தவறு ஏதும் நாம் இழைத்தால்
தயங்காமல் தண்டனை தந்து
எம்மை நல்வழிப்படுத்தினீர்கள்
இல்லறத்தை திறம்பட நாம் நடாத்த
இனிய ஆலோசனைகள் பல தந்தீர்கள்
இன்னும் பல வருடம் எம்முடன் வாழ்வீர்கள்
என நாம் நினைக்க உங்கள் வாழ்வும்
விதியின் விளையாட்டுப் பொருளாகிவிட்டது
நீங்கள் காட்டிய நெறிப்படி நாமிங்குவாழ
சிவலோகத்திலிருந்து எமக்கு நல்லாசிகள்
பலவற்றை எப்போதும் காட்டிடுவீர்.

## பூட்டப்பிள்ளைகள் புலம்பல்

எங்கள் அருமைத் தாத்தாவே - எம்மை
கொஞ்சிக்குலாவித்தூக்கி வளர்த்து வந்தீர்கள்
எம் அறியாப்பருவம் நீங்க முன்பே
எங்களைத் தவிக்கவிட்டு சென்றுவிட்டீர்கள்
உங்கள் வதனத்தை வடிவாக அறியாது
வெளியூரில் நாம் வசித்தாலும்
வேண்டிய வேளையில் அன்பாய் கதைப்பீர்கள்
அன்புடன் செல்லக் கதைகள் பேசிய
உங்களை நாம் இனி எங்கு தான் காண்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அன்பான அப்பாவே

எமக்கு அன்பையும் நற்பண்பையும் அள்ளித்தந்த அப்பாவே நீங்கள் உங்களுடைய குடும்பத்தில் கனிஷ்ட புதல்வனாக பிறந்ததனால் அப்பையா, அப்பம்மா, சகோதர சகோதரிகளினால் செல்லமாக வளர்க்கப்பட்டீர்கள்.

விளையாட்டாக சிறுவயதிலேயே அரசகாவல் துறையை (Police) தேர்ந்தெடுத்தனினால் உங்கள் படிப்பை இடையிலே நிறுத்திக் கொண்டீர்கள்.

உங்களுக்கு உங்கள் மனம் போலவே மிகச் சிறந்த வாழ்க்கைத் துணைவியாக அம்மாவை உங்கள் குடும்பத்தினர் தேர்ந்தெடுத்தார்கள்.

மனைக்கு மங்கா நல்ல மக்களைப் பெற்றெடுத்தல் என்ற வள்ளுவரின் வாக்குக்கு அமைய செல்வத்தை அள்ளிக் கொடுக்கும் தேவியான இலட்சுமியைப்போல் முதல் புதல்வியாக தனபாக்கியலட்சுமியையும் பின்னர் நித்தியானந்தம், சச்சிதானந்தம், தயானந்தம் ஆகிய புதல்வர்களையும் தூயமணி, திலகராணி ஆகிய புதல்விகளையும் கடைசியாக புத்திரன் முருகன் அருளால் பிறந்ததால் அவனுக்கு முருகானந்தம் எனும் நற்பெயரையும் சூட்டினீர்கள்.

உங்கள் அரசகாவற் பணியை கொழும்பு, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மன்னார், ஊர்காவற்துறை, மட்/கல்முனை, மட்/ஏறாவூர், கிளிநொச்சி ஆகிய பல இடங்களிலும் சிறப்பாக மேற்கொண்டு மேலதிகாரிகளின் அன்பையும், ஆதரவையும் பெற்று கடைசியாக நெடுந்தீவு பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இருந்து இளைப்பாறிக் கொண்டீர்கள். இப்படியாக இலங்கையின் பல பாகங்களிலும் பணி புரிந்ததால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிபுரிந்த இடங்களிலெல்லாம் நல்ல பல நண்பர்களைத் தேடிக் தந்தீர்கள். எங்களுக்கு இப்பொழுதும் ஞாபகத்தில் இருக்கின்றது உங்கள் நண்பர்கள் பலர் உங்களின் தங்கமான குணத்தால் உங்களுடைய தங்கராசா என்ற பெயரை கூதங்கம் என்று செல்லமாக அழைப்பார்கள்.

அப்பா வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் தனது நேரத்தின் அதிக பகுதியை ஆன்மீகவழியில் செலவு செய்தார். அம்மா தெய்வங்களுக்கு என்று செய்து விட்டுச் சென்ற பணிகளை தொடர்ந்தார். சிவபெருமானிடத்தில் அளவிடமுடியாத பக்தி கொண்ட அப்பா சிவனுக்கு சங்காபிஷேகம் செய்யும் குழுவினரில் முதன்மையாக இருந்து தொண்டு செய்தார். பத்திரகாளியில் உள்ள பக்தியில் தினமும் பத்திரகாளி கோயிலுக்கு சென்று விளக்கேற்றிவருவார். வைரவர் கோயிலுக்கு அபிஷேகங்களும் பணியும் செய்து வந்தார். இப்படியாக இறைபணி புரியும் நேரத்தில்தான் அப்பாவின் பணி போதுமென்று இறைவன் நினைத்தானோ என்னவோ அப்பாவின் காலில் ஏற்பட்ட சிறிய காயம் பெரிதாகி எங்களை துன்பத்தில் தவிக்கவிட்டு ஆண்டவன் அப்பாவை அழைத்துக்கொண்டார்.

அப்பாவின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து நிற்கும்

**த. சச்சிதானந்தம் (மகன்)**

(அவுஸ்திரேலியா)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# என்றும் எனதன்பு மாமா!

பள்ளிப் பருவமதில் மாமாவெனும் உறவேடு அப்பாவும் நீங்களும் மனம்மகிழ்ந்து மனதுக்குள் நினைவோடு நீங்கள் அதனை நெறிப்படுத்த கண்ட வழிகள் என் மனதோடு என்றும் எனது இன்ப துன்பங்கள் உங்கள் மகனோடு உங்கள் பேரனைக் காண நீங்கள் அழைத்ததனால் தாய்நாட்டில் ஆண்டுகள் இரண்டு சென்ற பின் மீண்டும் எமை அழைத்தீர் ஊரோடு மாமாவாக மகனாக பேரனாக எமை உறவோடு அமைத்து இன்று நீங்கள் இணைத்துள்ளீர்கள். தெய்வத்தோடு மாமா உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும் உங்கள் அன்பு.

மருமகள்
முருகானந்தம் தவலோஜினி
(இலண்டன்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது குடும்பத்தின் அணையாத தீபங்கள்



அமரர் திரு. கணபதிப்பிள்ளை தங்கராசா

அமரர் திருமதி தங்கராசா சாரதாம்பாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## அன்பான அப்பையாவே!


அன்பு அப்பாவே எமக்குத் தந்த பண்பான அப்பையாவே!
துன்பத்தில் எங்களைத் தவிக்க விட்டு தூரப்பயணம் சென்றதேனோ!
அன்புடன் எனக்கு பிஸ்கட் தந்து அரவணைத்த அப்பையாவே!

ஊருக்கு உங்களை வந்து பார்க்க மிகவும் ஆசையாக இருந்தது. அப்பா அம்மாவிடம் கேட்டேன். பிளைட் வீட்டின் மேலால் பறக்கும் போது அப்பையாவை இந்த பிளேனில் பார்க்கப் போவோம் என்று கேட்டேன் உங்களை இனி பார்க்க முடியாமல் போய் விட்டதை நினைத்தால் மிகுந்த கவலையாக உள்ளது.

ஆண்டவனின் அழைப்பை ஏற்று ஆகாயம் நோக்கி சென்றதேனோ!

அன்பான அம்மாவும் அப்பாவும் அண்ணாவும் அக்காவும் நானும் உங்களை இழந்து தவிக்கின்றோம்.

**சாரங்கா சச்சிதானந்தம்**
(அவுஸ்திரேலியா)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நீ தங்கம் ராஜா

அன்பருக்கு அன்பா நீ ஐயா
ஆசான் போல் அறிவுரைத்தாய்
என்றும் எமக்கு
இதுதான் செய்ய வேண்டும்
என்றுரைத்து உடன்
ஈந்திடுவாய் அவற்றை இறைவனுக்கு
உன்போல் உத்தமரை
காண்போம் எப்போது – நீ
ஊரில் உள்ள ஆலயத்தில்
எத்தனையோ செய்ய வேண்டும்
என்றுரைத்தாய் – அந்த
ஏக்கத்தால் உறக்கமில்லை
தினம் உனக்கு
ஐந்துகரத்தானை அழைப்பாய்
ஆவனுடன் அப்போது
ஒன்றில்முளைத்தான் நிற்பான்
வேலோடு நினைவில் என்றாயே – உடன்
ஔரதன் எங்கே என்னைக் கொண்டுபோ
சந்நிதிக்கு என்பாயே
உன்நாமம் தங்கராஜா – எல்லோர்க்கும்
ஊரவர்க்கு நீ. தங்கம் ராஜா.........
புண்பட்ட வேதனையில் வாழ்ந்தாய்
பலகாலம் – அங்கே
கண்பட்டதோ காலனுக்கு உன்பால் – உடன்
விண்ணுக்கு கொண்டு சென்றானோ
மண்ணைவிட்டு – அங்கு
பண்பான இடம் தந்து இறைவனடி சேர்வாய் ஐயா – நீ

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

பெறாமகன் த. சச்சிதானந்தம்
ஓய்வு பெற்ற சிரேஷ்ட ஆங்கிலத் தட்டெழுத்தாளர்
யாழ் போதான மருத்துவமனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டுக்கோட்டை முதுதமிழ்ப்புலவரின் மைந்தர்
இயற்றிய பாமாலை
குடும்பத்தார் இரங்கலாக

## தந்தவன் தந்தை

அத்தன் இழப்பால்
ஆற்றாத் துயருறும்
அன்பு உறவுகட்டுகள்
ஆத்ம வரிகளிவை!

அப்பன் முகத்தை
அறியாத ஒருவன் யான்!
எப்பொழுதும் எனக்குள்
இனந்தெரியாத இழப்பொன்று
அப்பிக் கிடப்பதுண்டு
அழுத கணங்களுண்டு!

செப்பிய தமிழால்
சிறப்புற்ற பெரும்புலவன்
அப்பன் எனச்சொல்லி
அம்மா வளர்த்த முகம்
இப்பொழுது வரையென்னுள்
இருந்தென்னை வாழ்த்துமே!
பெற்று வளர்த்த
பெரிய தெய்வங்கள்
அத்தனும் ஆத்தாளும்!

முற்றத்திலிருந்து
முழுநிலவு காட்டியவர்!
உற்றார் உறவுகளை
உரிமைகளை காட்டியவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றுத் துயரிற்
சரிந்தாலும் அருகிருந்து
சரியைப் பிழையைச்
கண் காட்டி தேற்றியவர்!
வற்றிக் கிடந்தாலும்
வறுமையிலே தளர்ந்தாலும்
பொத்திக் காப்பாற்றிப்
பொழுதுதென்றாய் ஊட்டியவர்!
குற்றம் புரிந்தாலும்
குணங்கண்டு எமக்குள்ளே
பற்றைப் பாசத்தைப்
பொழிந்து அணைத்தவர்கள்!

பள்ளிக்கு கள்ளம்
போட்ட பொழுதேல்லாம்
படலை திறந்து எம்முன்
பள்ளிவரை வந்தவர்கள்!
கொள்ளிக்கக் கூடக்
கூட இருக்காமாற், தள்ளி வந்த போதும்
"தம்பிள்ளை" என்றவர்கள்!

தாம் பிறந்த தேசத்திற்
தாகம் பசிபிணியில்
வேம்பு புளி மரநிழலிற்
தூங்கி யெழுந்தவர்கள்!
வாழ்ந்த வரலாற்றின்
வேரைத் தம்மோடு
தாங்கி நடந்த
தேசத் தவப்புதலர்வர்
தேம்பியழதபடி
தெருத்தெருவாய் அலைந்தாலும்
தாம் பெற்ற பிள்ளைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்று வளர்த்து
காலத்தோடுயர்ந்தாலும்
முற்றும் துறந்து
முதுநிலைதான் அடைந்தாலும்
பெற்றவரின் பாசத்தை
விட்டவர்கள் யாருள்ளார்?

செத்துப் போனார்
இவர் என்று சொன்னவுடன்
கத்தியழாதவர்கள்
காசினியில் யாருள்ளார்?

வித்தகர்கள் என்றும்
விற்பன்னர் நாமென்றும்
எத்தனையோ பேர்கள்
எம்மைப் புகழ்ந்திடலாம்!
இத்தனையும் எங்கள்
உயர்ச்சியிலே எழுந்த புகழ்!
வித்துக்களாகி
விழுந்த பொழுதிலெமை
ஒத்தியெடுத்து
உண்மையன்பாற்றி குளிப்பாட்டி
நெற்றியில் நீறிட்டு
நெஞ்சத் துணிவு தந்து
விட்டவர்கள் அன்பால்
விழிநிரப்பி வாழ்த்துகின்ற
அற்புதத்திற்கிந்த
அவனியிலே ஈடேது!

ஊர் தந்து பேர் தந்து
ஊட்கார மடிதந்து
வேர்தந்து விழிதந்து
விட்டவன் தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தந்தவன்" என்ற
தார்மீகப் பண்பான்
"தந்தை" யிவனானத்
தமிழ்தாய் பறித்தாளோ!
முந்தையர் முகத்தை
முகவரியாக்கிச்
சிந்தையில் நிறைந்தவன்
தந்தையென்றாகுமோ?
சொந்தமும் சுகமும்
தந்தவன் தந்தை
சுகமென அவனைக்
கண்டவள் எம் தாய்!
"தந்தை சொல் மிக்க
மந்திரமில்லை"
என்பது கூட
எம்மவர் பண்பாடு!

விந்தைகள் நிறைந்து
விரிந்திடும் உலகில்
தந்தை தாய் கூடச்
சந்தையில் விலைப்படும்
குந்தகம் கண்டு
குமுறுகிறது மனிதம்!
இந்த உலகிலும்
தந்தை தாய் போற்றும்
மைந்தர் வாழ்வது
மனிதத்தின் மேன்மையே
தந்தையை இழந்து
தவிர்க்கின்ற தம்பியரே!
தந்தையின் இழப்பாற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடித்திடும் தங்கைகாள்!
உங்கள் துயரின்
உறுத்தலைப் புரிகிறேன்!
பொங்கும் விழிநீர்ப்
பொழிவினை யுணர்கின்றேன்!

எந்தப் பிறவியில்
இனியும் இவனைக்
கண்டிடுவோம் நாம்
என்றே கலங்கிடும்
கவலையை அறிவேன்!

இந்த உலகினில்
இறப்பை வென்றவர்
எவருமேயில்லை
என்பதும் அறிவேன்!

எனினும் உங்கள்
இழப்பினில் நின்று
இணைந்து நின்று
துயரினைப் பகிர்கிறேன்!

தந்தையின் நினைவால்
தர்மங்கள் இயற்றிச்
சிந்தையில் நிறைவைச்
சேருங்கள் என்றே
அன்புடன் வேண்டி
ஆறுதல் கூறுவேன்.

அன்புடன்
**நல்லதம்பி சிவநாதன்**
(இலண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வட்டுக்கோட்டை விசாலாட்சி சமேத காசி விசுவநாத சிவன் தேவஸ்தானத்தின்

# இரங்கற் செய்தி

கலைநகர், சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் தங்கராசா அவர்கள் ஒரு சிறந்த சிவபத்தன். இவர் ஆலயத்தில் சரியைத் தொண்டில் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். இவரது சிவபத்தியும், சிவ சிந்தனையும் சமயப்பற்றும் பெருவிருப்புடன் சிவனுக்கு சேவையைச் செய்யும் மனப்பாங்கை ஏற்படுத்தியுள்ளது. தேவஸ்தானத்தின் சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெறுவதற்கு முன்னின்று உழைத்தவர்களுள் இவரும் ஒருவராவார். இவரது மறைவு ஒரு பேரிழப்பாகும். அன்னாரின் இழப்பால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சிவனடி சேரப் பிராத்திக்கின்றேன்.

சிவன்கோவிலடி,<br>வட்டுக்கோட்டை.

"வைத்திய கலாநிதி" **கா. சுமந்திரன்**<br>**தர்மகர்த்தா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரின் ஆன்மீகப் பணிகள் ஒரு சில...



வட்டுக்கோட்டை கணவன்தோட்டம் பத்திரகாளியம்மை தேவஸ்தானதில் "மாகாளிஅம்மை பதிகம்" எனும் நூல் வெளியீடும், கொலுவைக்கும் நிகழ்வும் அன்னாரின் உபயமாக மேற்கொள்ளப் பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவுற்றோம் இன்று சங்கெடுத்துச் சிவனைச் சிறப்பித்த தங்கராசா அண்ணலை

யாழ்ப்பாணத்தின் வளம் பல நிறைந்த ஊராம் வட்டுக்கோட்டையிலே கலைவளம் பெருகுகின்ற இடம் கலைநகர் மண்ணில் அமரர் கணபதிப்பிள்ளை அவர்கட்கு மாண்புமிகு மைந்தனாக வந்துதித்தார். இவ் அவனியிலே நம் தந்தை தங்கராசா அவர்கள். சிறு வயதிலிருந்தே சிறப்பாக வளர்ந்து உலகினில் ஈடுஇணையற்ற கல்விச் செல்வத்தை மதித்தும் கற்று செய்யுந் தொழிலைத் தெய்வமாகப் போற்றி இனிதே இல்வாழ்வில் இணைந்து நம்மூரில் நற்பண்புகளுடன் வாழ்ந்து வந்தார்.

இவ்வாறான நாட்கள் இன்பமாகக் கரைய, இவ் அவனியில் ஈடுஇணை அற்றது இறைவழிபாடு ஒன்றே என்றெண்ணி, தன் குலதெய்வம் வட்டுக்கோட்டை விசாலாட்சி சமேத காசிவிஸ்வநாதப் பெருமான் தான் என நினைத்து முற்றுமுழுதாகத் தன்னைச் சிவவழிபாட்டில் ஈடுபடுத்திக் கொண்டார்.

சித்தர்கள் வளர்த்த சிவவழிபாட்டில் சங்காபிடேகம் என்பது மிகமுக்கிய இடத்தை வகிக்கின்றது. இதனைத் தன் மனதில் பதித்த நம் தந்தை, எம்மூரில் ஒரு சிவஸ்தலம், இங்கு சங்காபிஷேகம் சிறக்க எண்ணி ஊர்மக்களின் அன்புடன் எனது தந்தை அமரர் பாலசுப்பிரமணியம், இன்றும் சிவத்தொண்டு செய்துகெகாண்டிருக்கும் துரைராசசிங்கம் ஆகியோரை தன்னுடன் இணைத்து இறைவன் நரிகளைப் பரிகளாக்கி மாணிக்கவாசகருக்கு அருள்புரிந்த ஆவணி மூல நன்நாளை ஒரு சிறந்த அருள்பாலிக்கும் திருவிழாவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றியமைத்தார். இந்நிகழ்விற்கு முன்னிரவு ஆலயத்தில் தங்கியிருந்து படிக்கட்டில் சங்கெடுக்க குருமாருக்கு உதவிபுரிந்து தன்னால் இயலும் காலம் வரை இறைத்தொண்டை செய்து வந்தார்.

சங்காபிஷேகம் என்றால் அந்நாளில் ஊரில் உள்ளோர் அனைவரின் ஒத்துழைப்புடனும் அதற்கென்று ஒரு சபை அமைத்து ஊரே விழாக்கோலம்பூண இணுவையூர் மறைந்த நாதஸ்வரமேதை "ஸ்வரஞான சாகித்திய இசையரசு" N.R கோவிந்தசாமி அவர்களை அழைத்து வந்து நாதஸ்வர கானமழை வழங்கி கருத்தொருமித்த ஊர்மக்களின் அன்புடன் மகேஸ்வர பூஜையை முன்னின்று நடாத்தி சிவத்தொண்டனாக வாழ்ந்து வந்தார். கலைவளர்க்க ஆவலுற்ற சங்காபிஷேக சபையினர், இந்நாள் இரவு முத்தமிழாம் இயல், இசை, நாடகம் ஆகியவற்றை சிறப்புற ஒருங்கமைத்து மின்சார விளக்குகளினால் சிகரம் கட்டி, அரங்கம் சுற்றி வான வேடிக்கைகள் நிகழ்த்தி வண்ணமயமாக ஊரையே மாற்றி இன்புற்றிருக்க இச்சபையுடன் முன்னின்று பாடுபட்டவர் மறைந்த நம் தந்தை தங்கராசா அவர்கள் இவையனைத்தும் எனது தந்தையார் அமரர் பாலசுப்பிரமணியம் அவர்களால் அறிவுரைக்கப்பட்டவை. என் துரதிஷ்டமோ என்னமோ என் அறிவு தெரிந்த நாளில் இவ்விழாவைக் காணமுடியவில்லை. ஆனால் ஆவணி மூல நன்நாளில் எந்த எழுச்சியும் இன்றி சங்காபிஷேகம் அமைதியாக நடைபெறும்போது மறைந்த நம் தந்தை ஓரமாக நின்று சிவனை வழிபடும் போது அருகாக நின்று அவதானித்திருக்கிறேன் அவர் தம் உள்ளக் கிடக்கையை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2002ஆம் ஆண்டு மீண்டும் தன் செலவிலே சங்கு அடுக்கும் படிக்கட்டுகளைத் திருத்தியமைத்து அன்னதானம் வழங்கி ஊர்போற்ற சிவனுக்கு சங்காபிஷேகம் நடக்க காரணமாயிருந்தார். சங்காபிஷேகத்தினை இவர் தலைமையில் பழைய சபையினர் சில பிணக்குகள் காரணமாக கைவிட்டதன் பின்னர் இருந்த இடைவெளியில் மனம் நொந்து வாழ்ந்த இவர் இதன் மூலம் சிறிய இன்பத்தை அனுபவித்திருந்தார்.

நாடு நலம்பெற்ற நல்மக்கள் சிறந்து விளங்க நம்மூர் சிவனுக்கு நம் மறைந்த தந்தை தலைமை வகித்து நடாத்தி வந்த திருவிழாவாம் சங்காபிஷேகம் வட்டு சிவன் அருளால் சிறப்பாக நடைபெறும் காலம் வரும். அன்றைய தினம் தந்தை அவர்களின் ஆத்மா ஆகாயத்தில் சிவனுக்கு ஐக்கியமாய் இருக்கும்போது மனதாற எம்மை ஆசீர்வதித்து தம்பணியைத் தொடரப் பணித்து இன்புற்றிருக்கும் என்பதில் ஐயத்திற்கு இடமேயில்லை.

மறைந்த தந்தையின் நினைவுகளை இந்நாளில் பகிர்ந்துகொள்ள வாய்ப்பு வழங்கி குடும்பத்தினருக்கு முன்னையநாள் சங்காபிஷேக சபையினர் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் அன்னாரின் ஆத்மா அமைதியடைய வட்டு விசாலாட்சி சமேத காசிவிஸ்வநாத சிவனைப் பிராத்திக்கின்றேன்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**இங்ஙனம்**

**முன்னைய சங்காபிஷேக சபை சார்பாக**
**அமரர் பாலசுப்பிரமணியம்**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கலைநகர் நேருஜீ சன சமூக நிலையத்தின்

# இரங்கற் செய்தி

கலைநகர், வட்டு வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தங்கராசா (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்) அவர்கள் 21-06-2006 புதன்கிழமை காலமானதை அறிந்து எமது நிர்வாகமும் கலைநகர் மக்களும் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளோம். இவர் தனது முதுமைக்காலத்தில் பொதுத்தொண்டு பலபுரிந்து சிறப்புற்றார். அதில் ஒன்றாக எமது சனசமூக நிலையத்திற்கு 1972 தொடக்கம் 1973 வரை கல்கண்டு எனும் வாரவெளியீடும் 1977ஆம் ஆண்டு தொடக்கம் 1989ஆம் ஆண்டு வரை டெய்லி நியூஸ் பத்திரிகை அன்பளிப்புச்செய்து வாசகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்துள்ளார். அத்துடன் இவரின் மூத்தமகனான திரு. த. நித்தியானந்தம் அவர்கள் எமது நிலையத்தின் தனாதிபராக இருந்து நிலையவளர்ச்சிக்கு பாடுபட்டுள்ளார். அதே போன்று இவரின் இளையமகன் த. தயானந்தம் அவர்கள் எமது நிலைய வளர்ச்சிக்கு பாடுபட்டு வருகின்றார். மேலும் இவரது மருமகன் டாக்டர். சு. கனகரத்தினம் அவர்களும் இளைய மருமகனாகிய திரு. வே. மோகனநாதன் (அதிபர்) அவர்களும் நிலைய வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வருகின்றனர். அன்னாரது பிரிவால் வாடும் பிள்ளைகள், மருமக்கள், உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!*

**நேருஜீ சனசமூக நிலையம்**

**கலைநகர்,**

**சித்தன்கேணி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dr. K.S. Kanagaratnam J.P
D.A.M.S. (CEY) M.H.H.(MADRAS) R.A.M.P. (CEY)
Reg No: 6148
T.Phone: 233677
82/112, SRI Ramanathan Road.
Clombo-13

"ஏகாக் ஏவ யாயதே யந்துரு
ஏகாக்க ஏவ பிறலீயதே
ஏராக்க ஏவ அனுபுந்தேசுகிரசம்
வைக்கிரதம்'

ஒருவன் தனிமையாக பிறக்கிறான் தனிமையாகவே இறங்கிறான் தனிமையாகவே சுகதுக்கத்தை, இன்பதுன்பத்தை அனுபவிக்கிறான். அவனுக்காக வேறு எவரும் எந்த விதமான உதவியும் செய்யமுடியாது. அவனவன் செய்ததன் பலனை அவனே அனுபவிப்பான் இதனை ஒரு சாதாரண மனிதனாகக் கூறலாம். இதனை மருமகன் என்ற இடத்தில் ஏற்றுக் கொண்டு அன்னாரின் நற்செயல்களை மீட்டுப்பார்த்தால் அதன் பயன் அவர் ஆத்மாசாந்திக்கு உறுதுணையாக அமையும்.

பல சகாப்தங்கள் கிட்டத்தட்ட நாற்பது அல்லது நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் திருநாவுக்கரசு வித்தியாசாலையில் அரசியல் கூட்டமொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கையில் பிரதான பேச்சாளர் பேச்சிடையே மனிதனில் இருக்கும் சாபக்கேடான சாதிகள் பற்றியபேச்சு இடம்பெற்றதும் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டு கூட்டமும் கலையத் தொடங்கியது. காரணம் சாதியை எதிர்த்து குரல் கொடுத்தது எமது மாமாதான் அதனால் கூட்டமும் பின்னர் களைந்தது. மனிதனுக்குள் என்ன சாதி, இத மனித பரிமானம், மனிதத்தன்மையை சிதறடிக்கும் அதனால் தவறு இல்லை என்று வாதிட்டேன் இப்படி உயர் நினைவு கொண்டவர் என்பதை மறக்க முடியாது.

அடுத்து வள்ளுவரின் கூற்றை எடுத்தாளலாம் ஆனால் அதன்படி நடப்பவர்கள் எத்தனை பேர்? சதத்தில் ஒருவர்தான் இருக்க முடியும்.

"தக்கார் தகவிலரென்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்" என்ற குறளுக்கிணங்க

தனது பிள்ளைகள் எல்லாம் பிற்காலத்தில் பெயர் சொல்லக்கூடிய நிலையில் இருக்க வேண்டும் என்ற நினைவில் பிள்ளைகளை பெரும் பணச் செலவில் படிப்பித்தும், தனது மத ஆதங்கத்தில் பெண் பிள்ளைகள் எல்லோரையும் அரசசேவையில் உள்ளவர்களுக்கு மணம் முடித்து கொடுத்தார். இம் மன ஆதங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது தமிழ் மக்களின் மனக்கிடக்கையில் விதிவிலக்கானதல்ல. பிற்காலத்தில் பிள்ளைகள் மட்டுமன்றி பேரப்பிள்ளைகளும் படித்து உயர் அந்தஸ்து பெற்று பேரனின் மனக்கிடக்கையை நடைமுறைப்படுத்தி செயல் மூலம் காட்டுவார்கள் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

ஊர்மக்களை எல்லாம் ஒன்று சேர்த்து வட்டு வீரபத்திர சிவபெருமானுக்கு சங்காபிஷேகத்துக்கு சங்கு அடுக்கும் பீடம் (சிலாபம் முனீஸ்வர பீடத்தின் மாதிரி) உரியமுறைப்படி செய்வித்து, காண்டீபன் இறை கம்பம்புலோ ஆதிவைரவர் தேவஸ்தானத்தில் இருந்து தவில், நாதஸ்வரம், சகிதம், ஊர் தெருவெல்லாம் மாவிலைத் தோரணம் தொங்க விட்டு எல்லோரும் தோளில் சுமந்து சென்று சிவபெருமான் கோவிலில் ஒப்படைத்த காட்சி நீங்காத நினைவாக இருக்கின்றது.

தமது குலதெய்வமாம் பத்திரகாளியிலும் தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகப்பெருமானிலும் நீங்காத பற்றுடையவராக இருந்தார். வகுத்தான் வகுத்தபடி நடக்கும் என்ற கூற்றையும் மீறி மாமிச உணவு உண்பவர்களையும் இறுதி நேரத்தில் காத்து, தன் அருளையும், மோட்சத்திற்கான வழியையும் காட்டும் முருகப்பெருமான் ஒருவர்தான். நாம் செய்யும் பிழைகளையும் பொறுத்து இறுதிக்காலத்தில் மன்னித்து நல்லருளாம் ஆத்மசாந்தியும் முக்திவழியும் காட்டும் தெய்வம் கந்தப்பெருமான் என்பதையும் நன்கு உணர்ந்திருந்தார்.

சமயத்தில் மிக்க பற்றுடையவர் கூட்டுப் பிரார்த்தனைகளில் பங்குபற்றியதையும் திருவாசகம், பகவக்கீதையிலும் என்றும் வாசிப்போடு நிற்காது ஆழ்ந்து ஆராய்ந்து படிக்கும் திறனுடையவராக இருந்து அதனில் கூறப்பட்ட பொருள் உணர்ந்து பிள்ளைகளுக்கு பெயரும் வைத்திருக்கின்றார் என்பதை உணர்ந்தேன். கங்கை முதல் கன்னியாகுமாரி வரை தீர்த்த யாத்திரை செய்தாலும், விரதங்கள் அனுட்டித்தாலும் மெய்ஞான உணர்வு பெறாதவனுக்கு முத்தி சித்திக்காது என்று மேடையில் மணிக்கணக்கில் பேசுவதிலும் பார்க்க ஐந்து நிமிடம் செயலில் காட்டுவதற்கு மதிப்பு மிகமிக அதிகம்.

வாழ்வாங்கு வாழ்ந்தவர் வானுறையும் தெய்வத்துள்
ஆத்ம சாந்தியடைய மனமார வேண்டுகின்றேன்.

**வைத்திய கலாநிதி சு. கனகரத்தினம் J.P.**
(தலைவர் - தத்துவ ஞானத் தவச்சாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னாரின் ஆன்மீகப் பணிகள் சில



அன்னாரால் விசாலாச்சி சமேத காசி விசுவநாதசிவன்
தேவஸ்தானத்திற்கு உபயமாக அன்பளிப்புச் செய்யப்பட்ட சங்கு
அடுக்கும் பீடம் வனப்புறக் காட்சி தருவதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கலைநகர் கம்பம்புலோ ஆதிவைரவப் பெருமான் ஆலய பரிபாலன சபையினரின்

# அனுதாபச்செய்தி

கணபதிப்பிள்ளை தங்கராசா (ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்) கலைநகர் கிராமத்தில் பலர் தங்கராசா என்ற பெயருடையவர்களாக வாழ்ந்து வந்துள்ளனர். வாழ்ந்து கொண்டும் இருக்கின்றனர். இவர்களில் இவர் மட்டுமே பொலீஸ் தங்கராசா என்ற நாமத்துடன் வாழ்ந்து இன்று அமரராகிவிட்டார்.

அமரர் தங்கராசாதான் வகித்த பதவிக்கு ஏற்றவாறு மிகவும் கண்ணியமாக வாழ்ந்து தனக்கென ஒரு தனியான பெயரைப் பதித்து விட்டு இன்று அமரராகி விட்டார். கடவுள் பக்தி இவரிடத்தில் அதிகமாக இருந்ததை காணக்கூடியதாக இருந்தது. ஆண்டவனிடம் அதிக ஈடுபாடு கொண்ட அமரர் பல ஆலயங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நிதியுதவி அளித்துள்ளார்.

சைவ வாழ்வுக்கும், மக்களுடன் அன்பாக பண்பாக பழகுவதற்கும் தனது பிள்ளைகளை உற்றார், உறவினர்களை அரவணைப்பதற்கும் அமரர் எடுத்துக்காட்டாக விளங்கியவர். எமது ஆலயத்துக்கு ஒலிபெருக்கியை அன்பளிப்புச்செய்து நாள்தோறும் தனது நாமத்தை எமது கிராம மக்கள் என்றும் நினைப்பதற்கு வழி சமைத்தவர். இந்த மண்ணில் பிறந்த அனைவரும் மறைவது நியதி நிறைவான வாழ்வினை வாழ்ந்து இன்று அமரரான பொலீஸ் தங்கராசாவின் பெயர் எமது கிராம மக்கள் உள்ளவரை நிலைத்து நிற்கும். இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குலதெய்வம் வைரவப்பெருமான் ஆறுதல் அளிக்க வேண்டுமென வேண்டிப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் ஆத்மா வைரவப்பெருமானின் பாதங்களை அடைவதாக.

**ஓம்சாந்தி ! ஓம்சாந்தி !! ஓம்சாந்தி !!!**

**அ. கந்தசாமி**
தலைவர்

**வே. த. கதிர்காமநாதன்**
செயலாளர்

கலைநகர் கம்பம்புலோ ஆதிவைரவப்பெருமான்
ஆலய பரிபாலன சபை
கலைநகர், சித்தன்கேணி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வட்டுக்கோட்டை வடக்கு
## கணவன் தோட்டம் காளியன் ஒல்லை



# அருள்மிகு மாகாளி பதிகம்

**எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்**

**காப்பு**

சீர்பயிலுஞ் செகமனைத்துஞ் சிறந்தே வாழத்
திருவருளாம் அமுதமழை பொழிந்து காப்பாள்
நீர்பயிலும் வட்டூரிற் காளியன் ஒல்லை
நிலவுதிருத் தளியுறையும் காளித்தாய்மேல்
பேர்பயிலும் சொன்மாலை பாடி யேத்த
பிறங்கிவளர் பிரணவத்தின் சொரூபம் ஆனோன்
கார்பயிலுங் கரடதடக் களிறெம் முன்னோன்
கணபதிதன் பாதமலர் காப்ப தாமே
(க)

*நூல்*

பாதமலர் தொழுதெழுவார் பத்த ரானோர்
பல்லியங்கள் இசைகூட்டும் பாங்க ரெல்லாம்
ஏதமெலாம் தீர்தருளும் எந்தாய் நீயும்
எளியேங்கள் பொருட்டாக எம்முன் னோனாம்
கோதகன்ற முருகர்செய் தவத்தி னாலே
கோமளமே தவநிதியே காளியன் ஒல்லை
ஆதியேபத் திரனோடு கோயில் கொண்டாய்
ஆரணியே காத்தருளெம் வராகித் தாயே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராகித்தாய், மாதங்கி, வீரி சூலி
வானோரும் மண்ணோரும் மகிழ்ந்து கூடி
பராவெடுப்பார் மடையுடைத்து விழிநீர் பாயும்
பைரவியே உளங்குழைந்து பரிமளிப்பாய்
தராதலத்தில் வட்டூரின் வடபால் மேவு
தகவுமலி மந்திரத்தில் யாரும் ஏத்த
அராவணிந்து பத்திரனோ டமர்ந்தி ருந்தாய்
அரவிந்த சரணங்கள் போற்றி அன்னாய்

(உ)

அரவிந்த சரணங்கள் போற்றி போற்றி
ஆரணியே திரிசூலி பத்ர காளி
பரரூபி வீரபத்ரர் 'சக்தி' நீயே
பாரனைத்தும் நின்னருளால் வாழக் கண்டோம்
வரமருள விழைந்தனைநீ வட்டூர் வந்து
வளங்குலவு காளியனார் ஒல்லை உற்றாய்
கரங்கூப்பி உளமுருகிக் கண்ணீ ராட்டிக்
காளியரே வேண்டுகிறோம் கடைக்கண் பாரீர்

(ங)

கடைக்கண்பார் சண்டமுண்டர் தம்மை மாய்த்து
சாமுண்டிப் பெயர்புனைந்தாய் தகவி னோடும்
விடையூரும் வித்தகனார் தம்மோ டாடி
விரவுமண்டம் யாவையுமே துளங்க வைத்தாய்
கொடைமுகிலே பத்திரர் தம் பாங்க மர்ந்து
கூடுபவக் கடல்கடக்கத் தோணி ஆனாய்
மடையுடைத்து நீர்பாயும் பழனவட்டூர்
மாதங்கீ பயங்கரியே கருணை செய்யே

(ப)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணைவிழிக் காரிகையே கால மெல்லாங்
காசினியோர் ஏவரையும் காய்ந்த தீயோன்
மருண்மனத்தன் தாருகனாம் அவுணர்கோனை
மணிகண்டன் ஏவலினால் வதைத்து நின்றாய்
தருமலியும் வட்டுருட் காளியன் ஒல்லை
தற்பரனாம் பத்திரனோ டமர்ந்திருந்தாய்
அருநிதியே ஆத்தாளே அபயம் அம்மா
(ரு)

அம்மாநீ மேலான தெய்வங் கண்டோம்
அரும்பொன்னும் பொருட்குவையும் போகமெல்லாம்
இம்மாநி லத்தோர்கள் துய்த்து வாழ
இறைவீர பத்திரனோ டிருந்தருள்வாய்
மம்மரெலாம் போக்கியருள் காளியாத்தா
மாரிமுத்தே திரிசூலி வல்லணங்கே
எம்மருங்கும் சோலை பயில் வட்டுராளே
இமயவல்லி சண்டிகையே சரணீ தாளே
(சா)

இமயவல்லி கங்காளி கடைக்கண் பாராய்
என்னுயிர்போல் பிறவுயிரைப் பேண வேண்டும்
அமையமிது சூதுவா தழுக்கா றாதி
அசுரகுணம் அடியோடும் அகல வேண்டும்
நமவென்றுன் நாமங்கள் நவில வேண்டும்
நறும்பொழில்சேர் வட்டுரை நயந்த தேவி
அமலையே வீரபத்ரர் அணைக்கும் தாயே
அகங்குளிர அடியேம்முன் காட்சி தாராய்
(எ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாராய்நீ சகலசெல்வ யோக வாழ்வு
சங்கரியே சுந்தரியே சந்ரமௌலி
பாரிடரும் கூளிகளும் பாங்கில மேவ
பறையொலிப்பச் சதிர்கூட்டி நடமும் செய்வாய்
காராரும் பண்ணைபயில் வட்டூர் தானுங்
கவினுறவே பத்திரனோ டமர்ந்திருந்தாய்
நேராரும் இல்லாதாய் பத்ர காளி
நெஞ்சகத்தும் வீற்றிருந் தருளும் தாயே
(அ)

தாயேநின் திருவதனம் அருள்கொழிக்கும்
தவழ்ந்துவரு புன்னகைவெம் பவநோய் தீர்க்கும்
வாயார வாழ்த்துமவர் வேண்டும் யாவும்
வரையாதே திருக்கரங்கள் வழங்கும் சூலி
ஏயதிரு வடிப்பதுமம் சிவஞா னத்தை
ஈந்தருளும் வீரபத்ர சுவாமியோட
சேயரெமை ஆண்டருள வட்டூர் வந்தாய்
தேவியரே மாகாளி, திருத்தாள் போற்றி

போற்றியெங்கள் பூரணியே புலவோர் ஏத்தும்
பூங்கொடியே அயனோடு மாலுங் காணா
ஆற்றன்மலி காளியரே அமலை நீயும்
ஆதிபரன் வீரபத் சுவாமி கூட
நோற்றுநினை வட்டூரில் முருகர் வேண்ட
நூபுரங்கள் ஒலிமுழுப்ப உவந்து வந்தாய்
கோற் றொடியே கொற்றவையே தொழும்ப ரானோம்
குழைந்துருகிச் சென்னி வைத்தோம் திருப்பா தம்மே

சுபம்

**ஆக்கம்: புலவர்மணி, பண்டிதர் க. மயில்வாகனனார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# மாகாளி போற்றி அகவல்

அன்னைமா காளி அம்பிகை போற்றி
நின்னையே சரணென் றடைந்தோம் போற்றி
ஆயிழை அமரி ஆரணி போற்றி
வேயன தோளி விமலையே போற்றி
இறைவியே ஞான வாரிதி போற்றி

குறைகள் தவிர்க்கும் கொழுந்தே போற்றி
ஈறிலா இளமை உடையாய் போற்றி
மாறிலா ஆனந்த வடிவே போற்றி
உயிரே தொழும்பர் உணர்வே போற்றி
செயிரவை தீர்க்கும் தேவியே போற்றி

ஊக்குவாய் அடியரை உமையே போற்றி
ஆக்குவாய் காப்பாய் அருள்வாய் போற்றி
எளியாத் நெஞ்சத் திருப்பாய் போற்றி
களிமகிழ் வருளுங் காரிகை போற்றி
ஏந்திழை காரணி பூரணி போற்றி

மாந்தளிர் மேனி மாதே போற்றி
ஐயையே வானோர்க் கரியாய் போற்றி
மையல் தவிர்க்கும் மருந்தே போற்றி
ஒப்பிலி மாதே ஒண்டொடி போற்றி
அப்பனோ டாடிய அணங்கே போற்றி

ஓதியாய் இலங்கும் உத்தமி போற்றி
ஆதியும் அந்தமும் அகன்றாய் போற்றி
ஔவையாய் நின்ற ஆயிழை போற்றி
கொவ்வைக் கனிவாய்க் கொற்றவை போற்றி
கன்னி ஆங்காரி காரிகை போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னருள் தெய்வதப் பாவாய் போற்றி
காட்டிடம் அமர்ந்த கரும்பே போற்றி
வீட்டினை உதவும் வீரி போற்றி
கிருபா கரியே கேடிலாய் போற்றி
அருவே உருவே அமரி போற்றி

கீர்த்திகள் மிக்க கிரிசை போற்றி
வார்த்தையுள் அடங்கா வனிதை போற்றி
குமரியே எண்டோட் கோதாய் போற்றி
அமலையென் றோதும் அம்மையே போற்றி
கூடார்க்கும் அருள் கோற்றொடி போற்றி

வாடா மலரே வனிதாய் போற்றி
கெடலருள்துப்பில் மடவரல் போற்றி
அடல்வலி அசுரரைக் காய்ந்தாய் போற்றி
கேசரி ஊர்ந்தருள் காளி போற்றி
ஆசகல் அலகைக் கொடியாய் போற்றி

கைம வதியே கங்காளி போற்றி
மைக்கடல் மேனி மடக்கொடி போற்றி
கொற்றவை திரிபுரை கொழுந்தே
செற்றங் களையும் செல்வி போற்றி
கோமளை மதுபதி குமாரி போற்றி

மாமழை போலருள் மாரியே போற்றி
கௌரியே கருதரும் பொருளே போற்றி
மௌனியர் இதயத் துறைவாய் போற்றி
சண்டிகை சாம்பவி குண்டலி போற்றி
அண்டினர்க் கபயம் அருள்வாய் போற்றி

காமுறு தொண்டர் கருத்தினை போற்றி
சிம்ம வாகினியே சிவையே போற்றி
அம்மையே அலந்தேம் அருள்புரி போற்றி
சீரெலாம் நிறைந்த சேயிழை போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரி அந்தரி வந்தருள் போற்றி
எந்தமை ஆளும் இறைவீ போற்றி
சூலி கபாலி துணையே போற்றி
ஆல கண்டனோ டாடினை போற்றி
செந்திரு வணங்கும் அந்தரி போற்றி

பந்தமும் வீடும் படைப்போய் போற்றி
சேம வைப்பென்னத் திகழ்வாய் போற்றி
தாமஞ் சூடிய தலைவீ போற்றி
சைவத்துறையும் தையால் போற்றி
அயில்வேல் ஏந்தும் ஆயே போற்றி

சொற்பதங் கடந்த சுகமே போற்றி
சோதி வடிவாம் ஆதியே போற்றி
நீதி நெறியினர் நினைவே போற்றி
சௌந்தரி அழகி தாயே போற்றி
அந்தமில் பெருமை அணங்கே போற்றி

தடம்புயத் தாவுணரைத் தடித்தாய் போற்றி
கடம்பமர் காளையை அருளினை போற்றி
தாருக விநாசினித் தாயே போற்றி
வாரா வழியருள் வாலையே போற்றி
திக்கெலாம் புகழும் தேவி போற்றி

மிகன்கவர் போற்றும் வீரி போற்றி
தீயர்க் கும்அருள் திறலோய் போற்றி
சேயரை உயர்த்துஞ் சேயிழை போற்றி
துன்பக் கடற்கரும் தோணிநீ போற்றி
அன்புக் கரசி ஆனாய் போற்றி

தூலமொடு சூக்கமாம் சோதி போற்றி
ஞாலம் போற்றும் நாயகி போற்றி
தெள்ளிய ஞானத் திரளே போற்றி
உள்ளினர் உள்ளத் துறைவாய் போற்றி
தேவரும் முனிவரும் தேடினர் போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவலர் புகழும் பாவையே போற்றி
தைவதம் நீயலால் பிறரிலை போற்றி
ஐவருக் கருளிய அணங்கே போற்றி
தொண்டருக் குதவுந் தொடிக்கையாய் போற்றி
அண்டர்கள் பரவும் அன்னாய் போற்றி

தோத்திரஞ் சொல்லித் தொழுதோம் போற்றி
ஆத்தா ளேயெம் ஆயிழை போற்றி
நம்பினார்க் கருளும் நங்காய் போற்றி
வெம்பிணி தீர்க்கும் விறலோய் போற்றி
நாயகி நங்காய் நர்த்தனி போற்றி

சாயகம் தாங்கிய தையலே போற்றி
நிருமலி நீலி நின்னடி போற்றி
கருதரும் பொருளே காளி போற்றி
பதுமை தேவி பைரவி போற்றி
இதமெலாம் அருளும் ஏந்திழை போற்றி

பாரதி பயங்கரி பத்திரை போற்றி
தேர்வரி தாகிய தெய்வமே போற்றி
பிராட்டி பெருமாட்டி பெதும்பை போற்றி
வளமலி வட்டூர் வந்தாய் போற்றி
கணவன் தோட்டக் காளிய னொல்லை

வீரபத்திரனோடுறை வீரி போற்றி
தணவா துறையும் தாயே போற்றி
போற்றி போற்றி பூரணி புரந்தரி
காத்தருள் போற்றி காளித் தாயே

சுபம்

ஆக்கம்: **புலவர்மணி, பண்டிதர்**
**திரு. க. மயில்வாகனனார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
1921
06
15

இறப்பு
2006
06
21

## அமரர் திரு. கணபதிப்பிள்ளை தங்கராசா

கலைநகரின்ஒளிவிளக்கு அணைந்ததோ
காற்றில் வேகமாய் ஆவியும் கரைந்ததோ
மண்ணில் தோன்றிடும் மனிதற்கு மறைவும்
ஓர் மரபாய் போனதன்றோ

தங்கராசா எனும் பெயருக்கிணங்க
உன்குணத்திலும் தங்கந்தானையா
அரச காவல்துறையில் இருந்து
மக்களுக்கு சிறந்த சேவையாற்றினீர்

உமது பிள்ளைகளை எமது கழகத்தின்
சேவைக்கு அள்ளித் தந்து விட்டநீர்
உம்மைப் போன்ற சேவைமனப்
பாண்மையை எம்மிடம் வளர்த்து விட்டீர்

காலம் வெகுவாகச் செல்லலாம்
காலன்தான் உமைக் கொண்டு செல்லலாம்
உறவோடு உறவாடி உம் உள்ளத்தை
என்றும் மறவோம் ஐயா

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

கலைநகர்,
சித்தன்கேணி.

கலைநகர் விளையாட்டுக் கழகம்
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் நெகிழ்கின்றோம்

தோற்றம்
1921– 06–21



மறைவு
2006– 06– 21

## அமரர் திரு. கணபதிப்பிள்ளை தங்கராசா

(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

கலைநகரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தங்கராசா (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்) அவர்கள் 21–06–2006 புதன்கிழமை காலமான செய்தி கேட்டு எமது நிர்வாகமும் கலைநகர் மக்களும் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளார்கள்.

அன்னார் எமது நிலைய வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர். இவர் எமது நிலையத்திற்கு "டெயிலி நியூஸ்" பத்திரிகையை 1977ஆம் ஆண்டு தொடக்கம் 1989ஆம் ஆண்டுவரை உவந்தளித்து வாசகர்களின் ஆவலைப்பூர்த்தி செய்துள்ளார். அத்துடன் இவரது மூத்தமகனான த. நித்தியானந்தம் அவர்கள் எமது நிலையத்தில் தனாதிபராக இருந்துள்ளார். அதேபோன்று இளைய மகனான த. தயானந்தம் அவர்களும் எமது நிலைய வளர்ச்சிக்கு பாடுபட்டு வருகின்றார்.அத்தோடு இவரது மருமக்கள் டாக்டர். சு. கனகரத்தினம் அவர்களும் திரு. வே. மோகனநாதன் (அதிபர்) அவர்களும் நிலையத்தின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபடுகின்றனர். அன்னாரது பிரிவால் வாடும் பிள்ளைகள், மருமக்கள், உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!**

**பொ. காங்கேயநாதன்**
தலைவர்

**க. பகரசிங்கம்**
செயலாளர்

**நேருஜி சனசமூக நிலையம்**
**கலைநகர்,**
**சித்தன்கேணி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மருத்துவக் குறிப்புக்கள்

* வெள்ளரிப்பிஞ்சை பச்சையாகவோ அல்லது பருப்புடன் சேர்த்தோ சமைத்து உண்டுவர இரத்தக்கொதிப்பு மட்டுப்படும். வெள்ளரிப்பிஞ்சு இல்லாத காலத்தில் வெந்தயக் கீரையைச் சமைத்து உண்ணவும்.

* ஒரு ஸ்பூன் மிளகை இலேசாக வறுத்து வைத்துக்கொண்டு அதை அப்படியே தட்டிப்போட்டு சகாயம் வைத்து சிறிது தேனும் சேர்த்துச் சாப்பிட்டு வர நன்றாய் பசிக்கும்.

* தேங்காய் எண்ணெயில் கற்பூரம் சேர்த்து நன்கு சுடவைத்து ஆறவைத்து நெஞ்சில் தடவி வர சளியால் ஏற்பட்ட நெஞ்சுவலி குணமாகும்.

* ஐந்து அல்லது ஆறு துளசி இலைகளும் சிறுதுண்டு சுக்கு, இரண்டு கராம்பு சேர்த்து நன்கு அரைத்து நெற்றியில் பத்தாகப் போட்டால் தலைவலி குணமாகும்.

* சுக்கு, திப்பிலி, ஏலம், வால்மிளகு ஆகியவற்றை வறுத்துப் பொடியாக்கி தேனில் கலந்து சாப்பிட தொண்டைக் கரகரப்பு குணமாகும்.

* நெல்லிக்காயைச்சாறு பிழிந்து தேன் சேர்த்துச் சாப்பிட்டால் தொடர் விக்கல் தீரும்.

* வெந்தயத்தை நெய்யில் வறுத்துப்பொடி செய்து மோரில் சாப்பிட வயிற்றுவலி குணமாகும்.

* கண்டங்கத்தரி இலைச்சாற்றை ஒலிவ் எண்ணெயில் காய்ச்சி பூசிவர பித்த வெடிப்பு குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* செம்பருத்தி இலைகளைத் தூள் செய்து தினமும் இருவேளை சாப்பிட்டு வர மலச்சிக்கல் தீரும்.

* வெள்ளைப்பூண்டை வெற்றிலை சேர்த்து மசிய அரைத்து தினமும் தோலில் தேய்த்துக் குளித்துவர தேமல் குணமாகும்.

* வாழைத்தண்டைச் சுட்டு அதன் சாம்பலைத் தேங்காய் எண்ணெயுடன் கலந்து தடவிவர தீப்புண், சீழ்வடிதல் மற்றும் காயங்கள் குணமாகும்.

* மாதுளை மொக்கை காயவைத்து பொடி செய்து உண்டு வந்தால் இருமல் கட்டுப்படும்.

* எலுமிச்சம் பழச்சாறுடன் தேன் கலந்து குடிக்க வரட்டிருமல் குணமாகும்.

* அகத்திக் கீரை சாற்றையும் அகத்திப் பூச்சாற்றையும் தேனில் கலந்து சாப்பிட்டு வர தும்மல் நிற்கும்.

* தினமும் குளிப்பதற்கு முன் மல்லிகை பூவை அரைத்து உடம்பில் பூசி அரைமணி நேரம் கழித்து குளித்து வந்தால் அரிப்பு நீங்கும்.

* கோரைக்கிழங்கு, பற்படாகம், துளசி, மல்லி, சுக்கு, மரமஞ்சள் சம அளவு எடுத்து 1லீற்றர் நீர் விட்டு $^1/_2$ லீற்றராக வற்ற வைத்து ஒரு நாளைக்கு மூன்று வேளை குடிக்க சுரம் அதாவது சாதாரண சுரம் தணியும்.

* நிலவேம்பு, பற்படாகம், சீந்தில், மல்லி, சுக்கு, மரமஞ்சள் சமஅளவு எடுத்து 1லீற்றர் நீர்விட்டு $^1/_2$ பங்காக வற்றவைத்து ஒரு நாளைக்கு 3 வேளை குடிக்க நடுக்கத்துடன் கூடிய சுரம் தணியும்.

* முடக்கொத்தான் ஒருபிடி, மல்லி 3 மேசைக்கரண்டி, உள்ளி 3 பல் மிளகு $^1/_2$ மேசைக்கரண்டி 1லீற்றர் நீர்விட்டு $^1/_2$ பங்காக்கி 1நாள் 3 வேளை அல்லது 4 வேளை குடிக்க உடல் கை, கால் குத்துளைவு சுகமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நற்சீரகம் 100கிராம் வெயிலில் உலர்த்தி 50கிராம் சீனி சேர்த்து பவுடர் ஆக்கி காலை, மாலை ஒரு தேக்கரண்டி வீதம் சாப்பிட்டு வர வெள்ளை போதல், சிறுநீர் எரிச்சல், உடல் சூடு தணியும் உடம்பு குளிர்ச்சி ஆகும்.

* மல்லி 100கிராம், சந்தனசீவல் 50கிராம் ஆகியவற்றுள் 1லீற்றர் நீர் விட்டு அரைவாசியாக வற்ற எரித்து 100மி.லீற்றர் குடிநீரில் 1மேசைக்கரண்டி தேன் விட்டு குடிக்க கணைச்சூடு, உடல் எரிவு சகல சூட்டு ரோகங்களும் குணமாகும்.

* ஆடாதோடை இலைச்சாறு 1மேசைக்கரண்டி தேன் $^{1}/_{2}$ மேசைக்கரண்டி கலந்து ஒரு நாளைக்கு 3வேளை குடிக்க சளி தணிவடையும்.

* கற்பூரவள்ளி 10 இலை, தூதுவளை 15 இலை, துளசி 15 இலை, மிளகு 1தேக்கரண்டி, உள்ளி 3 பல், மல்லி 3 மேசைக்கரண்டி $^{1}/_{2}$ லீற்றர் நீர்விட்டு $^{1}/_{4}$ லீற்றராக வற்ற வைத்து தேனுடன் கலந்து ஒருநாளிற்கு 4 வேளை குடிக்க முட்டு, இழுப்பு சுகமாகும்.

* ஓமம், சுக்கு, மிளகு சமஅளவு எடுத்து வறுத்து பொடியாக்கி அரைத்தேக்கரண்டி வீதம் தேன்விட்டு மூன்று வேளை சாப்பிட சாதாரண வயிற்றுப்போக்கு குணமாகும்.

* தினசரி ஒரு கரண்டி தேன், இருகரண்டி பால், இருகரண்டி கரட்சாறு இவை மூன்றையும் கலந்து அல்லது கறுவா, வேர்க்கொம்பு இரண்டையும் பொடி செய்து வெந்நீரில் கொதிக்க விட்டு காலை, மாலை சாப்பிட்டு வர ஞாபசக்தி பெருகும்.

* சிறிது சந்தனமும், மிளகும் சாதிக்காயும் சேர்த்து அரைத்து ஒருவாரம் தொடர்ந்து முகத்தில் பூசவும் அல்லது அவரை இலைச்சாற்றை தொடர்ந்து முகத்தில் பூசிவர முகப்பரு குறையும்.

* அம்மாப் பச்சையரிசிச் செடியின் பாலை கால் ஆணிமீது காலை, மாலை என மூன்று நாட்கள் போட்டு வந்தால் கால் ஆணி மறைந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தான்றிக்காய்ப் பொடியை அரைஸ்பூண் வீதம் காலை, மாலை தேனுடன் உட்கொள்ள எல்லா இருமலும் தீரும்.

* கீழ்க்காய் நெல்லிச் சமூலத்தை பாலில் அரைத்துப் பாலிலேயே கலக்கி உட்கொண்டு வந்தால் சோகை, காமாலை, உடல் வெளுப்பு தீரும்.

* நாவல் வித்தினைப் பொடியாக்கி ஆடுதின்னாப்பாலை சாறு விட்டு அரைத்து பட்டாணி அளவு மாத்திரைகள் செய்து உலர்த்திப் பத்திரப்படுத்தவும். காலை, மாலை ஒரு மாத்திரை சாப்பிட்டு வர சர்க்கரை வியாதி தீரும்.

* கடுக்காய் பவுடரை தேனில் கலந்து அவ்வப்போது சாப்பிட விக்கல் தீரும்.

* தானியாவை கஷாயமாக்கி 50மில்லிலீற்றருக்கு 1ஸ்பூன் சீனி கலந்து 2 முதல் 3 வேளை குடிக்க தேக காங்கை தீரும்.

* வசம்பைச் சுட்டு சாம்பல் ஆக்கிப் பொடித்து தேனுடன் நாக்கில் தடவ வாந்தி, ஓங்காளம் நிற்கும்.

* வெள்ளைப்பூண்டின் சாற்றினை உள்நாக்கில் பூசிவர வளர்ச்சி குறைந்து அதனால் ஏற்படும் இருமல், அரிப்பு, வீக்கம் குறையும்.

* அதி மதுரப் பவடர், சந்தனப்பவுடர் இரண்டையும் $^1/_2$ கிராம் எடுத்துப் பாலுடன் சேர்த்து 3 அல்லது 4 முறை குடிக்க வாந்தியுடன் இரத்தம் வருதல் நிற்கும்.

* $^1/_2$ ஸ்பூன் அசுவந்திப் பவுடருடன் சிறிது நெய்கலந்து இரவு சாப்பிட்டு வர நன்கு தூக்கம்வரும்.

* அதிக மதுரப்பவுடர், சந்தனப்பவுடர் இரண்டையும் $^1/_2$ கிராம் எடுத்துப் பாலுடன் சேர்த்து 3 அல்லது 4 முறை குடிக்க வாந்தியுடன் இரத்தம் வருதல் நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளம் கனிந்த நன்றிகள்

✡ எங்கள் குடும்ப விளக்காகிய அமரர் கணபதிப்பிள்ளை தங்கராசா அவர்கள் 21-06-2006 அணைந்தபோது.......

✡ எமது இல்லம் நாடி வந்து அனுதாபம் தெரிவித்தவர்கக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும்.......

✡ தொலைபெசி, தந்தி வாயிலாக அனுதாகச்செய்தி அனுப்பியவர்களுக்கும்.......

✡ மலர்வளையம் சாத்திப் பிரார்த்தனை செய்தும், பத்திரிகை மூலம் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தும் துயரங்களைப் பகிர்ந்து கொண்ட யா / அராலி இந்துக் கல்லூரி உபஅதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்களுக்கும்......

✡ கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்ட நேருஜீ சனசமூகநிலையம், கலைநகர் விளையாட்டுக்கழகமும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினருக்கும்.......

✡ அன்னார் நோயுற்றிருந்தவேளை தமது சிரமத்தைப் பாராது வீட்டிற்கு வந்து சிகிச்சை அளித்துச் சென்ற திரு. குகதாஸ் (காரைநகர்), Dr. பரமசிவம்பிள்ளை (அராலி, வடக்கு),திரு. மாணிக்கம் (கொக்குவில்), திரு. முருகையா (அளவெட்டி) ஆகியோர்ருக்கும் .......

✡ நினைவு மலருக்கு அஞ்சலி உரை வழங்கியவர்கக்கும்......

✡ இம்மலரை அழகுற அச்சிட்டுத்தந்த சங்கானை திருமொழி அச்சகத்தினருக்கும்.......

✡ அந்தியேட்டிக் கிரியையிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலம் கலந்து கொண்டவர்களிற்கும் எமது துயரத்தில் பங்கு கொண்டது மட்டுமன்றி பல்வேறு வழிகளிலும் பெருதவி புரிந்த அணைத்து அன்புள்ளங்களிற்கும்........

**எமது உளம் கனிந்த நன்றிகள்.**

"காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப்பெரிது"

இங்ஙனம்

வட்டு வடக்கு, **பிள்ளைகள், மருமக்கள்,**
கலைநகர், **பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**
சித்தன்கேணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருத்

கணபதிப்பிள்ளை + சீதாதேவி

முருகுப்பிள்ளை அமரசிங்கம் பாக்கியலட்சுமி அன்னலட்சுமி பொன்னம்மா தங்கராசா Dr. (

தனபாக்கியலட்சுமி
+
Dr. கனகரத்தினம்

கீதாஞ்சலி
கிருஷ்ணவேணி
கிருஷ்ணபிரசாத்
ராதாகிருஷ்ணா

+
யோகேந்திரன்

கிருதினன்
அஸ்வினன்

+
சிவகுமார்

கிருஷ்மிகா

நித்தியானந்தம்
+
இன்பவல்லி

தனுசன்
மயூரன்
கௌசிகா

சச்சிதானந்தம்
+
நந்தினி


அகிலன்
சகானா
சாரங்கா

தயா
செல்வ

யகே
தய
தவ
லிசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருத்தி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைக்காய் சில தத்துவங்கள்

- வாழ்க்கையில் முன்னேற சொந்தக்காலால் நட மற்றவர் முதுகில் போக விரும்பாதே
- அறிவுத்தெளிவு இருந்தால்தான் கலக்கமின்றி நிதானமாக செயற்பட முடியும்
- ஏறி வந்த ஏணியை எட்டி உதைக்காதே! வாழ்ந்து வந்த வாழ்க்கையை மறவாதே!
- தன்னடக்கமே வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய தலையாய நெறியாகும்.
- ஆணவம் என்பது உண்மையை மறுப்பதும் பிறரை இழிவாக நினைப்பதும் ஆகும்.
- பிறரிடம் குற்றம் காணும் ஒருவன் தன் மனத்தையே மாசுபடுத்துகின்றான்.
- உண்மை என்ற பாணத்தை விடுமுன் அதன் முனையை தேனில் தேய்த்துக்கொள்ளவும்.
- சிந்தனை மனிதனை முழுமையானவனாக உருவாக்குகிறது.
- ஆண்டவனை வணங்கினால் அலையும் மனம் தானே அடங்கும்

திருமொழி அச்சகம், சங்கானை.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org